Regiteered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 7 (6-12-65) இதழ் 297
விசுவாவசு கார்த்திகை 21 ஷஃபான் பிறை 12 திங்கட்கிழமை

கண்ணைக் கவரும்
தங்க, வைர நகைகளுக்கு



போன் 585 PHONE 585

K. N. M.

மீரன் சாஹிப்

தங்கப்பவுண் நகை மாளிகை

கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.

## விண்வெளிக் கயிறு!

வாஷிங்டன், டிச. 5

அமெரிக்க விண்வெளி வீரர்கள் தங்களது மூன்றுவது (பூமிவலம்) சுற்றின் போது; கயிறு அல்லது நாடா போன்ற ஒருபொருள் தங்களது விண்கலத்தை முட்டிச் சென்றதாக அறிவித்துள்ளனர். இதனை பூமியிலுள்ள கட்டுப்பாட்டு நிலையத்தினர் ஆராய்ந்துவருகிறார்கள்.

# வட, கிழக்கில் பேய்மழை

## கிழக்கு மாகாணத்தில் வெள்ளம்

மட்டக்களப்பு, ஞாயிறு

கிழக்குமாகாணத்தைப் பொறுத்தமட்டில், மட்டக்களப்பு திருக்கோணமலை ஆகிய இடங்களில் பலத்த மழைக்குப்பின்னர் இன்று மழை ஓய்ந்திருந்தது. ஆனல் மட்டக்களப்பை சுற்றியுள்ள தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் நிற்கிறது. ஏற்கனவே இங்கு பெய்த கடும் மழையினுல் பல வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. வயல்கள் யாவும் நீரில் மூழ்கிவிட்டன.

மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராசதுரை பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சென்று பார்வையிட்டதுடன் இப் பகுதி மக்களுக்கு நிவாரண உதவிகள் அளிப்பதிலும் முயற்சி மேற்கொண்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு உடனடியாக நிவாரண உதவிகள் வழங்குமாறு திரு, செ. இராசதுரை சமுகசேவா பகுதியினரையும் அரசாங்க அதிபரையும் கோரியுள்ளார். அரசாங்க அதிபர் நேற்று மழையினுல் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சென்று பார்வையிட்டார்.

### போக்குவரத்து

மன்னம்பிட்டி பகுதியில் ரயில்சேவைகள் வழமைபோல் இருந்தபொழுதிலும் ரஸ்தா போக்குவரத்து சேவைகள் துண்டிக்கப்பட்டிருக்கின்றன. சுமார் நாலடி தண்ணீர் இங்கு பாய்கிறது.

மட்டக்களப்பு- கல்முனைப் பாதையில் பெரியகல்லாற்றில் மூன்றடி தண்ணீர் இருப்பதால் இந்த போக்கு

(6 பக்கம் பார்க்க)

## பல இடங்களில் வெள்ளம்; போக்குவரத்துகளும் துண்டிப்பு

### ரயில் சேவைகளில் மாற்றம் இல்லை

யாழ்ப்பாணம், திங்கள்

கடந்த சில தினங்களாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெய்த பேய்மழை கிழக்கில் சற்று ஓய்ந்திருந்த போதிலும், வடக்கில் நீடித்து வருகிறது. கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் வெள்ளம் நிற்கிறது. ஏராளமான நெல் வயல்கள் வெள்ளத்தில் மூழ்கிவிட்டன. சிலபாதைகளில் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டிருக்கின்றன. வடக்கு மாகாணத்தில் மழை தொடர்ந்து பெய்வதால் தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் ஏற்படலாம் என அஞ்சப்படுகிறது. பஸ்போக்குவரத்துகள் சில இடங்களில் துண்டிக்கப்பட்டிருந்த போதிலும் ரயில் சேவைகள் எதுவும் பாதிக்கப்படவில்லை.

வடமாகாணத்தில் பல இடங்களிலும் தொடர்ந்து மழை பெய்துகொண்டிருப்பதால், பெரும் வெள்ளம் ஏற்படலாமென பொதுமக்கள் மத்தியில் அச்சம் நிலவுகிறது. தாழ்ந்த பகுதிகளிலுள்ள குடிசைகளில் உள்ளவர்கள் முன்னெச் சரிக்கையாக வெளியேறிவிட்டார்கள்.

கடந்த ஐந்து தினங்களாக, இரவு பகலாக தொடர்ந்து மழைபெய்துகொண்டிருப்பதால், சில குளங்கள் கிணறுகள் நிரம்பிவிட்டதோடு, வீடுகள், ஆலயங்கள், ஆஸ்பத்திரிகள், பாடசாலைகள் வெள்ளத்தால் நான்கு திசைகளிலும் முற்றுகையிடப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில், கடந்த ஐந்துதினங்களாக தண்ணீர் தேங்கி நிற்பதால் பிரயாணிகள் தங்குவதற்கு இடமில்லாது, அருகேயுள்ள மீன் கடைகளிலும் இறைச்சிக் கடைகளிலும், கருவாட்டுக் கடைகளிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

பிரதான வீதிகளின் இருகரைகளிலும் வெள்ளம் தேங்கி நிற்பதால், மக்கள் அவ்வீதியால் நடந்துசெல்ல முடியாதபடி கஷ்டப்படுகின்றனர்.

### சாவகச்சேரியில்

கடந்த சில தினங்களாகப் பெய்த மழையினுல் இங்குள்ள பல வீடுகளை வெள்ளம் சூழ்ந்துவிட்டது. கிணறுகள், குளங்கள் நிரம்பிவழிகின்றன. வயல்களிலெல்லாம் வரம்பு மட்டத்திற்கு வெள்ளம் நிற்பதால் இளம் பயிர்கள் தண்ணீரில் மூழ்கிவிட்டன. பஸ் நிலையம் சேறும்சகதியுமாக காட்சியளிக்கிறது.

கைதடி வயோதிபர் இல்லத்தை சுற்றி வெள்ளம் அதிகரித்துவருகிறது கொடிகாமம், வரணி, கச்சாய், மிருசுவில், சரசாலை மற்றும் பல இடங்களில் தொடர்ந்து மழைபெய்து வருவதால் அநேக வீடுகளைச் சுற்றி வெள்ளம் அதிகரித்து வருகிறது. தாழ்ந்த பிரதேசங்களிலுள்ள மக்கள் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். தொடர்ந்து மழைபெய்யும் என்ற அச்சத்தினுல். பலர் அத்தியாவசிய உணவுப் பொருட்களை கூடுதலாக வாங்கிச் சேமித்துள்ளனர்.

### கிளிநொச்சியில்

ஆனையிறவு, பண்டிமோட்டை அதனை அடுத்துள்ள கரையோரப் பகுதிகளில் சுமார் இருநூறு வீடுகள் வெள்ளத்தில் மூழ்கிவிட்டன. இவ்வீடுகளிலுள்ளவர்கள் வேறு இடத்திற்கு சென்றுள்ளனர். இவர்களுக்கு கிளிநொச்சிக் காரியாதிகாரி திரு. புள்ளநாயகம், கிராமசபை அங்கத்தவர் திரு. வி. சுப்பிரமணியம், திரு. கே. இராமச்சந்திரன் ஆகியோர் வள்ளத்தில் சென்று உடனடியாக உதவியளித்தனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

## தீவுப்பகுதி ஆசிரியர் எதிர்ப்பு

ஊர்காவற்றுறை, ஞாயிறு

''நடைபெறவிருக்கும்ஆசிரியர்களின் மாற்றத் திட்டம் அநீதியானது. வடகீழ் மாகாணங்களின் தரத்தைக் குறைப்பதும், ஆசிரியர்கள் பகடைக்காய்கள் என அரசியல்வாதிகளும் அரசினரும் நினைப்பதும் மிகவும் வருந்தத்தககது. நடைபெறும் இடமாற்றம் எந்த அடிப்படையில் நடைபெறுகின்றதெனத் தொழிற்சங்கங்கள் அறிய முடியாதிருப்பதும், தொழிற்சங்கப் பிரமுகர்களைக் கலந்துகொள்ளாது செய்த முடிவும் விசனிக்கத்தக்கது.''

தீவுப்பகுதித் தமிழாசிரியர் சங்கக் கூட்டம் நேற்று மாலை நடைபெற்றபோது சங்கத் தலைவர் திரு. வீ. வ. நல்லதம்பி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தலைவர் திரு. நல்லதம்பி மேலும் பேசுகையில் அரசினர் பாடசாலை ஆசிரியர்களையும், சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர்களையும் கலந்து மாற்றுவது நியாயமற்றதென்றும் கூறினுர்.

வித்தியா பகுதியினர் ஆசிரியர் இடமாற்றத் திட்டத்தைப் பின்போட்டு சேவை மூப்பு அட்டவணை தயாரித்து அரசினர்பாடசாலைஆசிரியர்களுக்கும் சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கும் வித்தியாசமின்றி அடிப்படைத் திட்டங்களை உரு

(2-ம் பக்கம் பார்க்க)

சூருவளி நிவாரண

## வலைகள் வழங்கப்பட்டன; ஆனல் மீனவர்களுக்கு கிடைக்கவில்லை

வவுனியா, ஞாயிறு

கடந்தஆண்டுவீசிய புயலினுல் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர்களுக்கென அமெரிக்காவும் ஜப்பானும் இலங்கைக்கு அன்பளிப்புச் செய்த மீன்பிடி வலைகள் இதுவரை வடமாகாணத்தில் பாதிக்கப்பட்ட எந்த ஒரு கடற்தொழிலாளருக்கும் வழங்கப்படவில்லையென அறியப்படுகிறது,

இந்த வலைகள் அந்த நாடுகளிலிருந்து சுமார் ஐந்து மாதங்களுக்கு முன் இங்கு அனுப்பப்பட்டன. வடமாகாணத்தில் இப்புயலினுல் பாதிக்கப்பட்ட மயிலிட்டி, பருத்தித்துறை, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 185 குடும்பங்களுக்கு இவ்வலைகளை வழங்க அரசாங்கம் சில மாதங்களுக்கு முன்னரே முடிவு செய்தது. எனினும் இக்குடும்பங்களுக்கு இந்த வலைகள் இன்னமும் கிடைக்கவில்லை எனத் தெரியவருகிறது.

இதுபற்றி வவுனியா எம். பி. அரசாங்கத்துக்கு நீண்டதொரு கடிதம் அனுப்பியுள்ளார். இக்கடிதத்தில் அவதிக்குள்ளாகியிருக்கும் மீனவர் குடும்பங்களுக்கு அரசாங்கம் உதவ முன் வந்தபோதும் ஏதோ ஒருவித முட்டுகட்டை ஏற்பட்டுள்ள காரணத்தினுல் அவர்களுக்கு இவ்வலைகள் இதுவரை கிடைக்கவில்லையெனச் சுட்டிக்காட்டி இவ்வலைகளை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்,

டயரும்ஸ்

கிறிஸ்மஸ் பண்டிகை மலிவு விற்பனை

இன்று ஆரம்பமாகின்றது

வாழ்க்கைச்செலவைக் குறைக்க உங்களுக்கு உதவிசெய்கின்றது.

அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாது நோகாலத்துடன் முந்துக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

மனிதனே! இங்கு வா! கவனமாகக் கேள். பயப்படாதே. இதோ நம்பிக்கையும் உற்சாகமும், தைரியமளிக்கும் ஒரு முக்கிய செய்தி. நீ இந்த அழியக்கூடிய உடல் அல்ல. எங்கும் நிறைந்துள்ள, நித்தியமான ஆத்மாதான் நீ. தியானம்செய். அனுபூதி பெற்று விடுதலை அடை.

— சுவாமி சிவானந்தர்.

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு கார்த்திகை மீ 21 உ. (6-12-65)

# அறிக்கைகளல்ல; துணிவுதான் வேண்டும்

சீர்குலைந்திருந்த தேசீய ஐக்கியம் மீண்டும் ஏற்பட்டு 'நம்மைப் பிடித்த பிசாசுகள்' நீங்கி நாடு முன்னேற்றப்பாதையில் காலடிஎடுத்து வைக்கும என்ற நம்பிக்கை அமைதியை விரும்பும் மக்கள் மனதில் தோன்றிய எட்டு மாதங்களுக்குள்ளாகவே ''பழைய குருடி கதவைத்திறவடி'' என்ற கதை ஆரம்பித்துள்ளதைக் கண்டு வேதனையடையாமலிருக்கமுடியாது

சில தினங்களுக்கு முன்னர்தான் நாம் இதேபத்தியில் 'மீண்டும் வகுப்புவாதம்' என்ற தலைப்பில் வகுப்புவாத இயக்கங்கள் பற்றி எச்சரித்திருந்தோம். ஞாயிறு ஈழநாடு தலையங்கத்திலும் தேசிய ஒற்றுமையின் அவசியத்தைப் பிரதமர் உணர்ந்திருப்பதைப் பாராட்டி, அந்த ஐக்கியத்தை நிலைபெறச்செய்ய மக்கள் பிரதமருக்கு ஒத்துழைப்பும் ஆதரவும் அளிக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டுருந்தோம்.

ஆனால் கொழும்புமாநரசபைத் தேர்தலும் மற்றும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களும் நெருங்க, நெருங்க, அரசியல்பழையபடி வகுப்புவாதக்குட்டையைநோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. வகுப்புவாதத்தை முளையிலே கிள்ளியெறிவதற்குப் பதிலாகபோட்டிவகுப்புவாத இயக்கங்களும் தோன்றக்கூடிய ஆபத்துக்கு அறிகுறிகள் தென்படுகின்றன. உண்மையைத் திரித்தும், உண்மைக்கு மாறுகவும் பிரசாரம்செய்வது அரசியலில் புதுமையல்ல. இங்கு தேர்தல் சமயத்தில் வகுப்புவாதப் பிரசாரம் தலைதூக்குவதும் புதிதல்ல. ஆனல் தவறைத் தவறுலேயே திருத்தலாமென்ற அபிப்பிராயம்தான் சரியாகத் தோன்றவில்லை. இந்நாட்டில் வாழும் சிறுபான்மையினர்தான் அரசியலில் பகடைக்காய்களாக உபயோகிக்கப்படுகின்றனர். இந்த அரசியல் வகுப்புவாத சூதாட்டத்தின் விளைவை 1958-ம் ஆண்டில் கண்ணுல் கண்டும்கூட அதிகாரஆசைஅதை மறைத்து, மறக்கச் செய்துவிடுகிறது.

பண்டா—செல்வா ஒப்பந்தம்பற்றியும் டட்லி—செல்வா ஒப்பந்தம்பற்றியும் இப்பொழுது அரசியல்பிரசாரம் உச்சக் கட்டத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. கிழித்துப் புதைக்கப்பட்ட பண்டா—செல்வா ஒப்பந்தமும் இல்லையென்றுசொல்லப்படுகிற டட்லி—செல்வா ஒப்பந்தமும் பத்திரிகைகளிலும் அறிக்கைகளிலும் தேர்தல் பிரசாரமேடைகளிலும் படாதபாடு படுகிறது. எதிர்க்கட்சினரின் பிரசாரம் பொய் என்பதை நிரூபிப்பதற்காக பிரதமர் 'விளக்க அறிக்கை'கள் விடுகிறார்.

அவற்றில் தேசிய ஒற்றுமையை அவர் வலியுறுத்துகின்றபோதிலும் தமிழ்பேசும் மக்களின் உரிமைகள் பற்றியும் அவர் குறிப்பிட நேரிடுகிறது. விளைவாக ஒரு சமூகத்தின் உரிமைகளைப் பாதுகாக்க மற்றொரு சமூகத்தின் உரிமைகள் பலியாவதா என்ற எண்ணம் சிறுபான்மையினர் மனதில் எழவும் இங்கு சிலர் போட்டி இயக்கங்கள் ஆரம்பிக்கவும் வழிவகுப்பதாக இருக்கிறது. இதேபோல் 'மகாசங்க' எனப்படும் பௌத்தமத குருமார்களின் சங்கங்களும் அறிக்கைகள் விடுகின்றன. இவைகளும் 1956-ம் வருடத்தை நினைவூட்டுவதாகவுள்ளன. அறிக்கைகளும் எதிர்ப் பிரசாரங்களும் தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டவும் அமைதியைப் பாதுகாக்கவும் உதவி செய்வதாக இருக்கவேண்டுமேயொழிய போட்டிவகுப்புவாதத்துக்கு இடமளிப்பதாக இருக்கக்கூடாது.

இந்த நாட்டில் சர்வாதிகாரம் ஏற்படாமல் தடுக்கவும் ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும் மகாசங்கம்மட்டுமல்ல இந்நாட்டிலுள்ள தமிழ் பேசும் மக்களும் உதவியும் ஒத்துழைப்பும் அளித்திருக்கின்றனர். ஜனநாயகம் பெரும்பான்மையினருக்கு மட்டும் ஏகபோகமானதல்ல: இந்நாட்டில் வாழும் சகல மக்களுக்கும் அந்த உரிமை இருக்கவேண்டும். வகுப்புவாதம் எங்கிருந்து உருவானுலும் அதை, நாட்டின் நலனைக் கருத்தில்கொண்டு, முளையிலேயே கிள்ளியெறிய, இப்போதுள்ள சட்டத்கொண்டே நடவடிக்கை எடுக்கலாம். அறிக்கைகளும் பதில் அறிக்கைகளும் விடுவதால் அதைக் கட்டுப்படுத்திவிடமுடியாது.தேசியஒற்றுமையை உருவாக்கிவிட்டால் போதாது, அதை நிலைபெறச்செய்து பாதுகாப்பதற்கு துணிவும் திடமும் வேண்டும். தேசிய அரசாங்கத்திடம் இதையே மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

## வடவியட்னும் மீது பெரும் போர்த்திட்டம்

### அமெரிக்கா தயாரிக்கிறது?

சைகோன், டிச. 5

சைகோனுக்கு தென் கிழக்கே நேற்று ஏற்பட்ட சண்டையில் 30 வியட்காங்கியர் கொல்லப்பட்டனர். தென்வியட்னும் அரசாங்கத் துருப்புகளுக்கு அதிக சேதமில்லையென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே வடக்கு வியட்னுமில் பெரும் யுத்தத்துக்காகன திட்டங்கள் தீட்டப்பட்டுவருவதாக வாஷிங்டனிலிருந்து வெளியாகும் செய்திகள் கூறுகின்றன. வடக்குவியட்னுமில் குண்டு வீச்சுகளை அதிகரித்து அங்கு பரவலாக இதனை நடத்துவது குறித்து அமெரிக்க அதிபர் திரு. லிண்டன் பி. ஜோன்ஸன் ஆலோசனை நடத்திவருகிருர். இவ்வாரத்தில் இதுசம்பந்தமாக ஒரு இறுதியான முடிவை அவர் மேற்கொள்ளுவார் மென்று கூறப்படுகிறது.

# தனிப்பட்ட வர்த்தகர்களின் குறைகளும் கஷ்டங்களும் நிவர்த்திக்க நடவடிக்கை

## எடுப்பதாக அரசாங்க அதிபர் வாக்குறுதி

பருத்தித்துறை, ஞாயிறு

பொருட் பற்றுக்குறை யாழ். மாவட்டத்தில் மட்டுமல்லநாடுபூராவுமே இருந்து வருகிறது. இருக்கும் அத்தியாவசிய பொருட்களைச் சகல வியாபாரிகட்கும் பங்கீடுசெய்வது இயலாததும் கஷ்டமானதுமாகும். சிறிய தொகையான அப்பொருள்களை பொதுமக்களுக்கு கட்டுப்பாட்டுடன் விநியோகம் செய்யுமுகமாகவே அவற்றைப் பலநோக்கச் சமாஜ மூலமாக ப. நோ. சங்கங்கட்கும் உத்தரவு பெற்ற வியாபாரிகட்கும் வழங்கி வருகிறோம்.

இவ்வாறு யாழ்ப்பாண மாவிட்ட அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா பருத்தித்துறைத் தொகுதி வர்த்தகர்கள் மத்தியில் பேசுகையில் கூறினுர்.

பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினம் மூலம் வர்த்தகர்சங்கம்தெரிவித்த குறைபாடுகளை அறியுமுகமாக காரியாதிகாரி காரியாலயத்தில் இம்மகாநாடு கூட்டப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் காரியாதிகாரி யாகியோரும் சமுகமாக இருப்த இம்மகாநாட்டில் வர்த்தகர்கள் கூட்டுறவுச் சமாஜங்கள் பொருட்கள் விநியோகம் செய்யும் முறைபற்றி பல குறைகளைக் கூறியதுடன் சமாஜங்களால் நடத்தப்படும் சில்லறை விற்பனை நிலையங்கள் இயங்குவதைத் தடைசெய்யவேண்டுமெனவும் கோரினர்.

பொருள்விநியோக முறைபற்றித் தாம்பரிசீலனை செய்வதுடன் இதுவிஷயமாகபூர்வாங்க விசாரணை ஒன்றை நடாத்துவதுடன் சில்லறை விற்பனைநிலையங்கள் மூடப்பட காரியாதிகாரியவர்கள் நடவடிக்கை டுப்பார் எனவும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாண மாணவர் கிளிநொச்சியில் களைபிடுங்கினர்

யாழ்ப்பாணம், திங்கள்

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற பல பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் கிளிநொச்சி வயல்களில் களை பிடுங்கினர். காலை பத்து மணியிலிருந்து மாலை மூன்று மணிவரை அங்குள்ள வயல்களில் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது களை பிடுங்கும் இயக்கத்திலீடுபட்டனர்,

கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி, ஸ்ரான்லி கல்லூரி, வைத்தீஸ்வர வித்தியாலயம், யாழ். மத்திய கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த 300 க்கு மேற்பட்ட மாணவர்களும் ஆசிரியர்களும் யாழ்ப்பாணத்திலிருந்து அதிகாலை நான்கு பஸ்களில் புறப்பட்டுச் சென்றனர்.

யாழ்ப்பாணம் தலைமைக் காரியாலயக் காரியாதிகாரி பிரிவைச் சேர்ந்த குழுவினர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி பிரிவைச் சேர்ந்த விவசாயப் பகுதியினர் ஆகியோர் இவ் வேற்பாட்டைச் செய்திருந்தனர்.

யாழ்ப்பாணம் தலைமைக் காரியாலய காரியாதிகாரி திரு. டி. டபிள்யூ. செல்வரத்தினம், உதவி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம், யாழ். உதவி அரசாங்கக அதிபர் திரு. ஏ. பெருமையினுர் ஆகியோர் மாணவர்களை வழியனுப்பிவைத்தனர்.

மாலை ஆறு மணிக்கு களை பிடுங்கச் சென்ற மாணவர் கோஷ்டி இங்கு வந்து சேர்ந்தது.

### சுழிபுரத்தில்

பண்ணுகம் மெய்கண்டான் பாடசாலையைசேர்ந்த சுமார் 50 மாணவர்கள் ஆசிரியர் திரு. இ. அப்பாத்துரை, உணவு உற்பத்தி மேற்பார்வையாளர் திரு. அ. குமாரசாமி ஆகியோர் தலைமையில் பொன்னுலை வயலொன்றில் களை பிடுங்கினர்.

## 2 மானங்கள் விண்ணில் மோதின

### ஐவர் மாண்டனர்

நியுயோர்க், டிச. 5

நியுயோர்க் அருகே நேற்றிரவு இரண்டு விமானங்கள் விண்ணில் மோதிக்கொண்டதில் ஐவர் மாண்டனர். பலர் படுகாயமடைந்தனர்.

இரண்டு விமானங்களும் மோதிக்கொண்டதில் ஒன்று கீழே விழுந்து விட்டதாகவும் மற்றது பத்திரமாக கென்னடி முனையில் தரையிறங்கியதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தீவுப்பகுதி . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாக்கவேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கல்விச் சேவைக்கமிஷனை நிறுவவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேறியது.

(5-ம் கலத் தொடர்ச்சி)

'பொம்மை' ஒன்று வந்திருக்கிறது. அந்தப் பொம்மையை வைத்துக்கெபண்டு எஸ். பாலச்சந்தர் 'சஸ்பென்ஸ்'களைச் செய்திருக்கிருர். அப்பப்பா, அந்த 'பொம்மை' என்ன வேலையெல்லாம் செய்கிறது. இதற்குமேல் அதைப் பற்றிச் சொன்னுல் 'சஸ்பென்ஸ்' கெட்டுவிடும்!

ஃ ஃ ஃ

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சென்ற சில தினங்களாக மழை கொட்டு கொட்டென்று கொட்டுகிறது. பல இடங்களில் சிறு வெள்ளம் ஏற்பட்டுள்ளது. பெருவெள்ளம் ஏற்பட்டுவிடுமோவென இப்பகுதி மக்கள் அஞ்சுகின்றனர். சென்ற வருடம் கோரப்புயல் வீசி, அதனுல் ஏற்பட்ட நஷ்டம் கொஞ்சமல்ல. புயலினுல் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னமும் புனர்வாழ்வு பெறவில்லை. இப்போது வெள்ள ஆபத்து. வடக்கு, கிழக்கு மக்கள் மீது இயற்கை அன்னைக்கு ஏன் இத்தனை கோபம்? ஏன் இந்தச் சோதனை?

மக்கள் சிந்திக்கவேண்டிய விஷயம். குற்றம் செய்யாமல் தண்டனை கிடைக்க இடமில்லை,

—ஊர்சுற்றி

## நாடும் நடப்பும்

புரட்சிசதி கண்டுபிடிக்கப்பட்டுவிட்டதாக 1962ம் ஆண்டு ஜனவரி 27ந் தேதி அப்போதிருந்த அரசாங்கம் அறிவித்தது. இராணுவ-பொலிஸ் உயர்தர அதிகாரிகள் பலரும் கைதுசெய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. இலங்கை வானெலி செய்தியில் கைதுசெய்யப்பட்டஅதிகாரிகளின் பெயர்களும் அறிவிக்கப்பட்டது. காலையில் அறிவிக்கப்பட்ட செய்தியில் முன்னுள் கடற்படைதளபதி ரோய்ஸ்டீமெல் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. பின்னர் அவர் கைதுசெய்யப்படவில்லையென்றும் அவரைத் தேடித்திரிவதாகவும் அறிவிக்கப்பட்டது. அவரைப்பற்றிய தகவல்கொடுப்பவர்களுக்கும் உயிருடன் பிடித்துக்கொடுப்பவர்களுக்கும் 1000 ரூபா சன்மானம் வழங்கப்படுமெனவும் அரசாங்கம் தெரிவித்தது.

ஆனுல் தகவல் கிடைக்கவில்லை. வதந்திகள் ஏராளமாகக் கிளம்பின. யாழ்ப்பாணத்தில் ஒளித்திருக்கிருரென்றும், வல்வெட்டித்துறைப் பாதையாக இந்தியாவுக்குத் தப்பிச்சென்றுவிட்டதாகவும் வதந்திகள். சுட்டுக் கொல்லப்பட்டுவிட்டதாகக்கூட ஊரில் பேச்சு அடிபட்டது.

சதிவழக்கை விசாரணை செய்ய விசேஷ நீதிமன்றம் அமைக்கப்பட்டு முதல்நாள் விசாரணை நடந்தபோதுதான் ரோய்ஸ்டீமெல் உயிருடன் இருக்கிருரென்ற தகவல் வெளிவந்தது. சில படங்களில் வரும் 'சஸ்பென்ஸ்' கட்டங்கள்போல் ரோய்ஸ்டீமெல் பற்றிய தகவலை வழக்கறிஞர் ஜி. ஜி. பொன்னம்பலம் வெளியிட்டுப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தினுர். சபாஷ் பொன்னு! என்ற பாராட்டு பலர் வாயிலிருந்தும் வெளிவந்தது.

ஃ ஃ ஃ

அந்த ஆறு மாதங்களிலும் ரோய்ஸ்டீமெல் எங்கே இருந்தார்? அது பரம இரகசியம். ''இப்பொழுதும் அதைப் பற்றிக் கேட்காதீர்கள். எனது வழக்கறிஞர்களைக் கேட்டபின்னர் தான் அந்த இரகசியத்தை வெளியிடுவேன்'' என்று இன்னமும் ஆஸ்பத்திரியிலேயே இருக்கும் ரோய்ஸ்டீமெல் கூறுகிருர். ஜி. ஜி. பொன்னம்பலம் வந்தபின் தான் இரகசியம் வெளிவருமோ! ஆனுல் ஒன்று அந்த ஆறு மாதங்களில் தான் யாழ்ப்பாணத்தில் இருக்கவே இல்லையென்பதை தெளிவாக்கியிருக்கிருர்.

ஃ ஃ ஃ

கடற்படைக்கும் கடவுளுக்கும் சம்பந்தமே கிடையாதென்று கருதிவந்தவராம் டீமெல். கடவுள்பக்தி அவருக்கு மிகவும் குறைவாம். ஆனுல் இப்பொழுது அவர் பெரும் பக்திமானும். சமயப் புத்தகங்கள் நிறையப் படித்து 'ஓர் அறிஞ'னுக மாறியுள்ளாராம். கஷ்டம் வந்தால்தானே கடவுளைப் பற்றிய சிந்தனை வரும். மனிதனுக்குக் கஷ்டங்கள் ஏன் வருகின்றன? இந்தக் கஷ்டங்களை யார் கொடுக்கிருர்கள்?

ஃ ஃ ஃ

சதிவழக்கில் 'சஸ்பென்ஸ்' பற்றிக் குறிப்பிட்டேனல்லவா? 'சஸ்பென்ஸ்' என்ருல் என்ன? இதற்கு தமிழ்ச் சொல் சொல்வதைவிட தமிழ்ப்படவுலகில் ஒருவர் செய்திருக்கும் புரட்சியைப் பார்த்து விளங்கிக்கொள்வதே சிறந்தது. யாழ்ப்பாணம் ராஜா தியேட்டரில்

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கெடு: டிசம்பர் 15**

# ஸ்மித் அரசாங்கத்தை நசுக்காவிட்டால் காமன்வெல்த்தை விட்டு வெளியேறுவோம்

## பிரிட்டனுக்கு உகண்டா, ஸியாராலியோன் எச்சரிக்கை

### ராஜீய உறவுகள் முறியலாம் என்கிறார் தன்ஸானிய அதிபர்

லண்டன், டிச. 5

சட்டவிரோதமான ஸ்மித்தின் அரசாங்கத்தை இம்மாதம் பதினைந்தாம் திகதிக்குள் பிரிட்டன் நசுக்காவிட்டால் காமன்வெல்த்திலிருந்து விலக நேரிடலாமென்று உகாண்டாவும், சியாரி, லியோனும் பிரிட்டனுக்கு எச்சரிக்கை செய்துள்ளன.

ஸ்மித்தின் சட்டவிரோதமான அரசாங்கத்தை இம்மாதம் 15-ம் திகதிக்குள் பிரிட்டன் எப்படியும் நசுக்கியே ஆகவேண்டும் என்றும் இது நிறைவேறாதபட்சத்தில்பிரிட்டனுடனான பொருளாதாரத் தொடர்புகளை அமெரிக்க நாடுகள் முறித்துக்கொள்ள நேரிடும் என்றும் அடிஸ் அபாபாவில் கூடிய ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம் அறிவித்திருந்ததைத்தொடர்ந்து பல ஆபிரிக்க நாடுகள் பிரிட்டனை எச்சரித்துள்ளது.

ரொடீஷியாவில் கலகக்கார அரசாங்கத்தை 15-ம் திகதிக்குள் நசுக்காவிட்டால் பிரிட்டனுடனான ராஜீயத் தொடர்புகளை முறித்துக் கொள்ள நேரிடலாம் என்று தன்ஸானிய அதிபர் பிரிட்டனை எச்சரித்துள்ளார்.

**கரீபா அணை**

ஸாம்பியாவிலுள்ள கரீபா அணைக்கட்டை நாசப்படுத்துவதில் ரொடீஷிய கலக அரசாங்கம் ஈடுபட்டிருப்பதை பிரிட்டன் உணர்ந்திருப்பதாக இங்கிருந்து வெளியாகும் சில செய்திகள் கூறுகின்றன.

## விண் வெளியில் வலம் வரும் அமெரிக்க வீரர்கள்

### இரு வாரகாலம் சஞ்சரிப்பார்கள்

கென்னடிமுனை, டிசம்பர் 5

இலங்கை நேரப்படி இன்று அதிகாலை கென்னடிமுனையிலிருந்து 'ஜெமினி-7' விண்வெளிக்கப்பலில் வானவெளிக்கு அனுப்பப்பட்ட இரண்டு அமெரிக்க விண்வெளி வீரர்களும் வெளிவான மண்டலத்தில் சுகமாகச் சஞ்சரித்துவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட சிலமணி நேரத்துக்குள் வெளியிடப்பெற்ற முதலாவது அறிக்கையின்படி, விண்வெளி வீரர்களுடனான தகவல் தொடர்புகள் சிறிது நேரம் தடைபட்டிருந்ததென்றும் ஆனால் பின்னர் சரிவந்துவிட்டதாகவும் தெரியவருகிறது.

'ஜெமினி-7' விண்வெளிக் கப்பலில் பிருங்போர்மன், ஜேம்ஸ் லொவெல் ஆகிய இரு வீரர்களும் பிரயாணம்செய்கிறார்கள். இவர்கள் இருவாரகாலத்துக்கு வெளிவான மண்டலத்தில் இருப்பார்கள். 206 தடவைகள் பூமியை வலம்வருவார்களென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரயாணத்தின்போது விண்வெளி வீரர்கள் சுகமாக நித்திரை செய்யமுடியுமா என்பதைப் பூமியிலுள்ள கட்டுப்பாட்டதிகாரிகள் கண்டறிவார்கள். விண்வெளி வீரர் போர்மனின் தலைமையில் இதுசம்பந்தமான கருவிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன.

இவரது மூளையின் சக்தியையும், அலைகளையும் கட்டுப்பாட்டதிகாரிகள் ஆராய்ந்து அவரது ஆழ்ந்த நித்திரையையும் கண்டறிவார்களென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று நண்பகல்வரை கடைசியாகக் கிடைக்கப்பெற்ற செய்திகளின்படி இவர்கள் இருவரும் சுகமாகப் பிரயாணம்செய்வதாகத் தெரியவருகிறது.

## 66-ல் கேரளாவில் தேர்தல் நடைபெறும்?

### ராஷ்டிரபதி ஆட்சியை விரைவில் முடித்துக்கொள்வதில் கவர்னரும் விருப்பம்

திருவனந்தபுரம், டிச. 5

1967-ம் ஆண்டில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலுக்கு முன்னர் கேரளாவில் தேர்தல் நடைபெறலாம் எனத் தெரியவருகிறது. இத் தேர்தல் அநேகமாக அடுத்தவருடபிற்பகுதியில் இடம்பெறலாம் என்றும் கூறப்படுகிறது.

இதுசம்பந்தமாக கவர்னர் திரு. ஏ. பி. ஜெயின் நிருபர்களிடம் தெரிவிக்கையில், பொதுத்தேர்தலுக்கு முன்னர் கேரளாவில் தேர்தல் நடைபெறமாட்டாது என்று ஒரேயடியாகச் சொல்லிவிடமுடியாது என்று கூறினர்.

1967-ம் ஆண்டு நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் போட்டியிடதாம் உத்தேசித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

''கேரளாவில் விரைவில் மந்திரிசபை ஆட்சி ஏற்படவேண்டும் என்பதையே நான் விரும்புகின்றேன். பொதுத்தேர்தலுக்கு முன்பு இங்கு தேர்தலைநடத்துவது, நிலைமைகளைப் பொறுத்திருக்கிறது. ராஷ்டிரபதி ஆட்சியை விரைவில் முடித்துக்கொள்ளவேண்டுமென்பதில் என்னைவிட வேறு யாருக்கும் அதிக அக்கறை இருக்கமுடியாது. ஆனால் இதற்காக மக்கள் ஒரு கிளர்ச்சியை நடத்துவதிலும் பலனில்லை'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆறு மாத காலத்துக்கு இங்கு ராஷ்டிரபதி ஆட்சியை நீடிக்குமாறு தாம் விடுத்த உத்தரவுக்குப்பின்னர் இங்குள்ள அரசியல் சூழ்நிலையில் மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

## ஆசிய அழகுராணி

### மலேசிய மங்கை தெரிவு

மணிலா, டிச. 5

ஆசிய அழகுராணியாக மலேசியாவைச் சேர்ந்த அஞ்செலாபில்மர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இருபது வயதுள்ள அஞ்செலா பில்மர் ஆசிய அழகுராணியாக தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம் பதின்மூன்று நாடுகளில் இவர் இலவசமாக உல்லாசப் பிரயாணம் செய்வார்.

இவருடன் எதிர்த்து போட்டியிட்டவர்கள் வருமாறு:

இலங்கை அழகு ராணி சிரில்டி சில்வா, ஹாங்கொங் அழகு ராணி லிலிசியூ, தென் வியட்னும் அழகுராணி தாய் கின் யோங், பிலிப்பைன்ஸ் அழகு ராணி றி சுவரஷியன் வியான்ஸொன்.

## சமாஜவிழா ஏற்பாடுகள்

சுழிபுரம், ஞாயிறு

யாழ். மாவட்ட சன சமூக நிலையங்களின் சமாஜம் 1966-ம் ஆண்டுக்கான சமாசவிழாவை எதிர்வரும் பங்குனி மாத முற்பகுதியில் நடாத்த ஏற்பாடுகள்செய்துவருகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பத்து காரியாதிகாரி பிரிவுகளிலும் உபவிழாக்களை நடாத்தி இறுதிவிழாவை சமாஜவிழாவாக நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இம்முறை நடைபெறும் சமாஜ விழா பல வகையிலும் அதிக முக்கியத்துவம் உடையதாக விளங்கும் என சமாஜ செயலாளர் அறிவித்துள்ளார்.

## 'ஐடிட் சாகவில்லை'

ஷாங்கொங், டிச. 5

இந்தோனேஷிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஐடிட் உயிருடன் இருக்கிறார் என்று நியூ சைனு நியூஸ்-ஏஜன்ஸி அறிவித்துள்ளது.

ஐடிட்கொலை செய்யப்பட்டதை இச்செய்தி ஸ்தாபனம் மறுத்துள்ளது.

## தமிழ் நாட்டிலும் கடும் மழை

### 2000 பேர் பாதிப்பு

சென்னை, டிச. 5

கடந்த மூன்று தினங்களாக தமிழ்நாட்டின் பலபகுதிகளில் கடுமையானமழை பெய்துவருவதால் தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ளம் பரவிவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பலபகுதிகளிலும் இரண்டாயிரத்துக்கதிகமானவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

சென்னையில் கடந்த வெள்ளிக்கிழமையிலிருந்து அடைமழை விடாது பெய்துவருகிறது. வாகனப் போக்குவரத்துக்கள் பலவிடங்களில் பாதிக்கப்படவிருக்கின்றன. சிலஇடங்களில் தந்தித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருக்கின்றன.

தஞ்சாவூரில் தொடர்ந்து பெய்யும் கடும்மழை காரணமாக ஆறுகளில் வெள்ளம் ஏற்பட்டு தாழ்ந்தபகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஏராளமான மக்கள் தங்களது வீடுகளைவிட்டு வெளியேறிவிட்டனர். தாழ்ந்த பிரதேசங்கள் பல இருளிலே மூழ்கியிருக்கின்றன.

தமிழ்நாட்டில் கடும்மழை தொடர்ந்து பெய்யும் என்று அவதானநிலையத்தினர் அறிவித்துள்ளனர்.

## பரீட்சையில் தவறும் மாணவருக்கு அபராதம்

சென்னை, டிச. 5

ஒன்பதாவது வகுப்பிலிருந்து பதினொராவது வகுப்புவரை ஒரு வகுப்பில் ஒரு தடவைக்கு மேல் பரீட்சையில் தவறும் மாணவர்களுக்கு அபராதம் விதிப்பதென்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இவ்வகுப்புகளில் ஒரு தடவைக்கு மேல் பரீட்சையில் தவறும் மாணவர்களுக்கு முப்பது ரூபா அபராதம் விதிக்கப்படும்.

இந்த அபராதத்தொகையை மூன்று தவணைகளில் வசூலிக்கலாம் என்று அரசாங்க உத்தரவு அறிவிக்கிறது.

## கொரில்லா பாடசாலைகள்

நிக்கோஸியா, டிச. 5

கொரில்லா பயிற்சிக்கான பாடசாலைகள் சைப்பிரஸ் மலைப் பகுதிகளில் இருப்பதாக வெளியான செய்திகளை சைப்பிரஸ் அரசாங்கம் மறுத்துள்ளது.

## துங்குவுக்கு கறுப்பு மான்கள்

### தமிழ்நாடு அன்பளிப்பு

சென்னை, டிச. 5

தமிழ்நாட்டு மக்கள் சார்பாக மலேஸியப் பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஹ்மானுக்கு தமிழ்நாட்டு முதன் மந்திரி திரு. எம். பக்தவத்சலம் இரண்டு கறுப்பு மான் குட்டிகளை அனுப்பிவைத்துள்ளார்.

இந்த வகையிலான மான் குட்டிகள் கிடைப்பது அரிதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## பிரிவுபசாரம்

சுழிபுரம், ஞாயிறு

யாழ். மறுமலர்ச்சி மன்றத்தினர்செல்வி லோறன்ஸ் மேற்படிப்பு படிப்பதற்காக இங்கிலாந்து செல்வதையிட்டு ஒரு பிரிவுபசார விருந்துவைபவம்வைத்து கௌரவித்தனர்.

## குழந்தைகளை விரைவாக பெறுக!

### தென்னுபிரிக்க வெள்ளையர் தம்பதிகளுக்கு மந்திரி வேண்டுகோள்

ஜோகன்னர்ஸ்பேக், டிச. 5

தென்னுபிரிக்கா குடியரசான ஐந்தாவது ஆண்டு நிறைவுவிழா அடுத்தமாதம் கொண்டாடப்படவிருக்கிறது. அதற்குள் அரசாங்க மந்திரியொருவர் அவசரம் அவசரமாக இங்குள்ள வெள்ளையருக்கு ஒரு வேண்டுகோளை விடுத்திருக்கின்றார்.

''தென்னுபிரிக்காவிலுள்ள வெள்ளையர் தம்பதிகள் நிறைய குழந்தைகளை பெற ஏற்பாடுசெய்யவேண்டும். இந்த இயக்கத்தை அடுத்த சிலமாதத்திற்குள் நிறைவேற்றிவிடவேண்டும்'' என்பதுதான் அந்த வேண்டுகோளாகும்.

இந்தக் கோரிக்கையை வெளியிட்டவர் தென்னுபிரிக்க மந்திரியான திரு. போத்தா என்பவராகும்.

தென்னுபிரிக்காவில் வெள்ளையர்கள் சிறுபான்மை இனத்தவர்களாக இருக்கிறார்கள் என்பது வாசக [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவாலியூர்
பிரம்மஸ்ரீ ச. சுப்பிரமணியஐயர் அவர்கள்
கூறுகிறார்கள்:
சுந்தரம் பிறதர்ஸ்
ஸ்தாபனத்தாரால் விநியோகிக்கப்படும்
**பச்சை சந்தனம்**
கோவில் தேவைகட்கும்
மற்றும் மங்களக்காரியங்களுக்கும் சிறந்தது.
இறைவன் திருமேனியில்
**சந்தனக் காப்பிட்டு**
அவனின் திருவருளைப் பெறுவதற்கும்
சிறந்த வஸ்துவாக அமைகிறது.
சுந்தரம் பிறதர்ஸ்
(கோவில் அபிஷேக திரவிய வியாபாரிகள்)
73, மின்சாரநிலைய வீதி — யாழ்ப்பாணம்.

## சங்கானையில் கலைவிழா

சங்கானை, ஞாயிறு

சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலையின் கலைவிழா நாளை திங்கட்கிழமை மாலை வித்தியாசாலை மண்டபத்தில் உதவி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் தலைமையில் பெற்றோர் - ஆசிரியர் ஆட்சிமன்றத்தாரினால் கொண்டாடப்படவிருக்கிறது.

சிறப்பு விருந்தாளராக வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம், திருவாளர்கள் ஜே. எம். சபாரத்தினம், ச. சபாபதி ஆகியோரும் பங்கு பற்றுகின்றனர். விழாவில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.




அனுதினமும் நெற்றி வியர்வை சிந்தி, வயலில், உற்பத்திசாலையில், தொழிற்சாலையில், அல்லது காரியாலயத்தில் உழைக்கும் அவருக்கு நிரம்பிய பலமும் சக்தியும் அவசியம். ஆகவே அவருக்கு மாமைட் விசேஷமாகத் தேவை. B வர்க்க விட்டமின்கள் நிறைந்திருக்கும் மாமைட் அவரை அனுதினமும் திடகாத்திரமாகவும் சுகமாகவும் இருக்கச் செய்கிறது.

ஆரோக்கியமாக சக்திமிகுந்து இருப்பதற்கு உங்கள் தினசரி ஆகாரத்தில் B விட்டமின்கள் அவசியம். உங்களுக்கு அனுதினமும் தேவையான B விட்டமின்கள் அனைத்தையும் அளிப்பது மட்டுமின்றி, மாமைட் ஒரு சிறந்த உணவு பொருளாகவும் இருக்கிறது. வெந்நீரிலோ அல்லது வெந்நீருடன் ஓரிரு சொட்டு எலுமிச்சம் பழச்சாறு கலந்தோ அல்லது தாளித்தோ மாமைட் அருந்தலாம். மாமைட்டை பட்டருடன் அல்லது பட்டரின்றி ரொட்டி, பிஸ்கட், அப்பம் இவற்றில் இலேசாக பூசி சாப்பிடலாம். குழம்பில் அல்லது சூப்பில் மாமைட் சேர்ப்பதனால் அவற்றிற்கு மேலும் சுவையூட்டுகிறீர்கள். B வர்க்க விட்டமின்களை எளிதாக உட்கொள்வதற்கு மிக்க சுவையான முறை மாமைட்டை உங்கள் தினசரி உணவுடன் சேர்த்துக்கொள்வதே.

**மாவுப் பொருள்
சர்க்கரைப் பொருள் அற்ற,
B விட்டமின் நிறைந்த,
தூய்மையான,
தாவர உணவுப்
பொருள்.**




**மாமைட்**

# இதுவன்றோ சேவை!

உடுப்பிட்டி, ஞாயிறு

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் வசாவிளானூடாகப்பருத்தித்துறைக்கு வந்துகொண்டிருந்த பருத்தித்துறை டிப்போவைச் சேர்ந்த பஸ் வண்டியில் ஓர் துணிகரத் திருட்டு நடைபெற்றது. ஆனால் பஸ் சாரதியினதும், கண்டக்டரினதும் அரிய முயற்சியால் இத்திருட்டு உடனடியாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் ஐம்பது ரூபா பெறுமதியான பொருளைக்கொண்ட பார்சல் ஒன்றை இந்த பஸ்ஸின் முன்பக்கமாக சாரதிக்கருகில் வைத்துவிட்டுப் பின்பக்கக் கதவால் வந்து ஏறிய வதிரியைச் சேர்ந்த ஒரு இளைஞன் ஈவினை என்னுமிடத்தை பஸ் தாண்டுகையில் தற்செயலாக முன்னால் பார்த்தபோது அப் பார்சலைக் காணவில்லை. உடனடியாக அவர் சாரதிக்கு முறையிட்டதும் சாரதி பஸ்ஸை நிறுத்திவிட்டு அப் பார்சலைப்பற்றி பிரயாணிகளை விசாரித்தார். எவரும் தமக்குத் தெரியாது என்று கூறவே சற்று முன்பாகவுள்ள இறங்குமிடத்தில் இறங்கிச்சென்ற பிரயாணிகளுள் ஒருவர்தான் பார்சலுடன்சென்றிருக்கவேண்டும் என்ற சந்தேகத்துடன் உடனடியாக அருகில் இருந்த சைக்கிள் கடையில் சைக்கிளை எடுத்துக்கொண்டு கண்டக்டர், சாரதி, இளைஞர் ஆகிய மூவரும் முன்பு இறங்கியவர்களைப் பிடிக்கச் சென்றனர். சுமார் இரண்டு மைல் தூரம்வரை அவர்கள் விசாரித்தபடியே சென்று இறுதியாக ஈவினை என்ற கிராமத்தில் ஓர் வீட்டினுள் நுழைந்தனர். பார்சலைத் திருடிய நபர் அங்கே அதைப் பிரித்துப் பார்த்துக்கொண்டிருந்தார்.

இவர்களைக் கண்டதும் திகைத்த அவர் தாம் தெரியாமல் தன்னுடைய பார்சல் என்று எடுத்து வந்ததாகத் தெரிவித்தார். "என்ன செய்வது? சில சமயங்களில் இத்தகைய விஷயங்களைச் சிலர் தெரியாமலேயே செய்துவிடுகிறார்கள்" என்று சாரதி நகைத்தபடியே பார்சலைப் பெற்றுக்கொண்டு, திரும்பினார்கள்.

ஒரு பிரயாணிக்காக இவ்வளவு கஷ்டப்பட்ட சாரதியையும் கண்டக்டரையும் பஸ்ஸிலிருந்த இதர பிரயாணிகள் பாராட்டினர். இத்தனை சம்பவங்களுக்கும் நமது நிருபரும் கூடவே இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தீவுப்பகுதி ஆசிரியர் பொதுக்கூட்டம்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

தீவுப்பகுதி ஆசிரியர்களின் விசேஷ கூட்டம் ஒன்று எதிர்வரும் புதன்கிழமை வேலணையில் நடைபெறவிருக்கிறது. இக்கூட்டம் பண்டிதர் திரு. வீ. வ. நல்லதம்பி தலைமையில் நடைபெறும்.

தீவுப்பகுதி எம். பி. திரு. நவரத்தினம், உடுப்பிட்டி எம். பி. திரு. சிவசிதம்பரம், வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், வழக்கறிஞர் திரு. என். ரி. சிவஞானம் ஆகியோர் பிரதம பேச்சாளராக அழைக்கப்பட்டுள்ளனர்.

தாய்ச்சங்கப் பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் கலந்துகொள்வார்கள் எனவும் அறியப்படுகிறது.

## "தமிழ் பிரதிநிதிகள் தவறிவிட்டார்கள்"

யாழ்ப்பாணம், திங்கள்

"உயர்தரக்கல்வி பெற விரும்புவோர் எல்லோருக்கும் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் போதிய இடமில்லாது இருப்பது இலங்கையில் ஏற்பட்டுள்ள மிக நெருக்கடியான பிரச்னை. தென்னிலங்கையைப் பொறுத்தமட்டில் மாணவர்களுக்குப் பேராதனையை விட வித்தியோதய வித்தியாலங்கார பல்கலைக்கழக வசதிகள் இருக்கின்றன".

சுன்னாகம் கம்யூனிஸ்ட் வாலிபர்சங்கக் கூட்டத்தில் வடபிரதேச கம்யூனிஸ்ட் சங்க காரியதரிசி திரு. ஐ. ஆர். அரியரத்தினம் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

காலஞ்சென்ற செனட்டர் நடேசன் தமிழ் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவுவதற்கு அரசாங்கத்திடம் அனுமதி வாங்கியிருந்தார். அந்த நேரம் ஆதரவு கொடுக்க தமிழ்ப் பிரதிநிதிகள் மறுத்துவிட்டனர். ஆதரவு கொடுத்திருந்தால் மாணவர்கள் இவ்வளவு கஷ்டப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது. ஆகையால் இனியாவது யாழ்ப்பாணத்தில் ஒரு தமிழ் பல்கலைக்கழகம் நிறுவ தமிழ் பிரதிநிதிகள் வற்புறுத்தவேண்டும்.

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம். ஞாயிறு

வலிகாமம் மேற்கு ஐக்கிய கூட்டுறவு பால்பண்ணை சங்க வருடாந்தக்கூட்டம் சங்கத் தலைவர் திரு. சு. கந்தசாமி ஜே. பி. தலைமையில் பண்ணாகம் மெய்கண்டான் உயர்தர பாடசாலைமண்டபத்தில் நடைபெற்றது.

பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் சு. கந்தசாமி ஜே. பி. உபதலைவர்கள் திருவாளர்கள். செ. ஸ்ரீனிவாசன், து. இராமநாதன், தனதிகாரி திரு. கி. பரராசசிங்கம். பதினைந்துபேர்கொண்ட நிர்வாகசபைஒன்றும்தெரிவு செய்யப்பட்டது.

## திருக்கார்த்திகை

வல்வெட்டித்துறை, ஞாயிறு

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோவில் திருக்கார்த்திகைத் தீபத்திருவிழா இம்மாதம் 7-ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

பகல் விசேஷ அபிஷேகமும் இரவு நாலு சாமப் பூஜையுடன் உற்சவமும் நடைபெறவிருக்கிறது.

## ஆசிய அபிவிருத்தி வங்கி
### 100 கோடி டாலர் மூலதனம்

மணிலா, டிச. 5

ஆசிய அபிவிருத்தி வங்கி இங்கு அமைக்கப்பட்டிருக்கிறது. வங்கியில் நூறுகோடி டாலர் மூலதனம் செய்யப்பட்டுள்ளது.

இங்கு அமைப்பது சம்பந்தமான ஒப்பந்தமொன்றில் இருபது நாடுகளின் பிரதிநிதிகள் கையெழுத்திட்டுள்ளனர்.

அடுத்த வருடத்திலிருந்து இந்த வங்கி இங்கு செயல்படத்தொடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### ஆயுள்வேத வைத்தியர் - உதவியாளர் விண்ணப்பம் கோரப்படுகின்றது

மேற்படி பதவிகட்குரிய விண்ணப்பங்களை மாந்தை - வடக்கு கிராமசபை கோருகின்றது. வேண்டும் விபரம் யாவற்றிற்கும் 9-12-65க்கிடையில் கீழ் வரும் விலாசதாருடன் தொடர்பு கொண்டு யாவற்றையும் அறிந்துகொள்க.

ஒப்பம்

சூ புல. யோசுவான்,
கிராமசபைத் தலைவர்,
மாந்தை - வடக்கு,
1288 அடம்பன்.

REGAL--JAFFNA
NOW SHOWING
Margaret Rutherford
IN M. G. M's
MURDER AHOY
(Agatha Christie's Novel)

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
எஸ். பாலச்சந்தர்
எல். விஜயலக்ஷ்மி
நடித்த
பொம்மை
தென்னகத்தில் 100 நாட்களுக்குமேல் ஓடி வெற்றி வாகை சூடிய திரைக்காவியம்!


# "நான் ஒளித்திருந்தது யாழ்ப்பாணத்திலல்ல"

— ரேய்ஸ் டி மெல்

## சதிவழக்கு பிரதிவாதிகள் தரும் தகவல்கள்

பம்பலப்பிட்டி, ஞாயிறு

"கடந்த ஐந்து வருட காலத்தில் நான் அனுபவித்த வேதனைகள் தாங்க முடியாது. கடற்படைப் பகுதியில் வேலை செய்து கொண்டிருந்தபோது, இந்திய ராஜாங்க விருந்தினராக அங்கிருந்த என்னை அழைத்ததைத் தொடர்ந்து என்னைப்படாதபாடு படுத்தினார்கள். ஆனால், யார்மீதும் எனக்கு இன்று பகைமையுணர்ச்சியோ, மனக் கசப் போகிடையாது" கொழும்பு பெரியாஸ்பத்திரியில் 22-ம் வார்ட்டில் நோய் வாய்ப்பட்டிருந்த சதி வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டு சிறைக்கைதியான, கடற்படை அதிகாரியாகப் பணியாற்றிய ரேய்ஸ் டி' மெல்லுக்கு விடுதலைச் செய்தியை அறிவித்ததும் அவர் இப்படியாகச் சொன்னார்.

விடுதலைச்செய்தி அறிவிக்கப்பட்டபோது, ரேய்ஸ் டி மெல் சுகவீனமான நிலையில் கொழும்பு பெரியாஸ் பத்திரியிலிருந்தார்.

### யாழ்ப்பாணத்தில் இருக்கவில்லை

"ஆறுமாத காலமாக நான் எங்கிருந்தேன் என்பதை மட்டும் என்னிடம் கேளாதீர்கள், அதுபற்றிநான் சட்டநிபுணர்களுடன் கலந்தாலோசித்தபின்னரேஇதுபற்றி சொல்லலாம். ஆனால் நான் யாழ்ப்பாணத்தில் இருக்கவில்லை என்பது மட்டும் உண்மை" என்று சொன்ன திரு. மெல் 'நான் ஒரு புத்தகம் எழுத இருக்கிறேன். ஆனாலும் அப்புத்தகத்தை அவ்வளவு தூரம் வெளியே பரவவிட விருப்பமில்லை. எனது நண்பர்களுக்கு மட்டும் அதனை வாசிக்கக்கொடுக்கலாம்" என்ற தகவலையும் வெளியிட்டார்.

'முதல் முறையாக சிறையில் வைக்கப்பட்டபோது எனக்கு நூற்றுக்கு நூறு வீதம் விடுதலைகிடைக்கும் என்ற நம்பிக்கையிருந்தது

(6-ம் பக்கம் பார்க்க)

சினிமா விமர்சனம்

## முரடன் முத்து

ஆமையாக அடங்கியிருப்பவனையும்மானமுள்ளமனிதனாக்கும் படந்தான் 'முரடன் முத்து'.

"ஜமீந்தாரென்ரு என்ன கொம்பா?" — முரடன் முத்துவாக வந்து சிவாஜி கணேசன் பேசும் இந்த வசனம் ஒன்று மட்டும் போதுமே, மனிதனை மனிதனாக்குவதற்கு!

தம்பி மீது உயிரையே வைத்திருக்கும் ஓர் அண்ணன். ஆனால் தம்பியோ முரடன்; அவனைத் திருத்த முயலும் அண்ணி; அந்தக் குடும்பத்தைக் கெடுக்க 'கூனி'யாக வந்து நிற்கும் ஒரு 'அத்தை'; அத்தைக்கு ஒரு நல்ல மகள்: அவளுக்கும் முரடனுக்கும் காதல்... குடும்பத்தில் சூருவளி— கல்யாணத்தில் 'சுப'மாக முடியும் கதை.

தமிழ்த்திரைப்பட உலகிலே வழக்கமாக வந்து போன காட்சிகள். ஆனாலும் ஒரு புதுமையைச்செய்திருக்கிறார் டைரக்டர்.

ஆண்டான் அடிமை என்ற வேறுபாடுகள் இருக்கக் கூடாது என்ற கருத்தை மையமாக வைத்து எடுக்கப்பட்ட ஒன்றிற்காக மட்டும் டைரக்டர் பந்துலுவைப் பாராட்டலாம்!

அண்ணிக்குக் கொடுத்த வாக்குக்குக் கட்டுப்பட்டு, உடம்பெல்லாம் அடிவாங்கி, இரத்தம் வடிய, குழந்தை மாதிரி சிவாஜி கணேசன் தேம்பித் தேம்பி அழும் கட்டம்-இன்னமும் நெஞ்சத்தில் நிழலாடுகிறது.

தேவியா- அவரைப்பற்றிச் சொல்வதற்கென்ன இருக்கிறது? பந்துலு- அண்ணனாக வந்து பார்ப்பவர் மனதைக் கசிய வைத்துவிடுகிறார்! ராஜம்மா-கண்ணம்பாவுக்கு அடுத்து 'தாய்'ப்பாகம் ஏற்று நடிப்பதற்கு "நானிருக்கிறேன்" என்பதை நிரூபித்துவிடுகிறார்.

நாகேஷ்-லட்சியவாதியாக வந்து, புதுமையும் புரட்சியும் செய்கிறார்; சிரிப்புக்கும் சிந்தனைக்கும் விருந்து போடுகிறார்.

பேபி ஷகீலா-அழகுசொட்டக் குழந்தைப் பேச்சுப் பேசி எல்லாரையும் சொக்க வைத்துவிடுகிறார்-அவர் நடிப்புக்கு 'சபாஷ்' போடலாமே!

சந்திரகாந்தா, அசோகன், பிரேம் நசீர், வி. கே. ராமசாமி, கருணாநிதி ஆகியோரும் நடித்திருக்கிறார்கள்.

பாட்டுக்கள் நினைவில் இல்லை.

முரடன்இருக்கிறான்; 'முத்து'வைக் காணவில்லையே!

யாழ்ப்பாணம் 'ராணி'த் திரையிலும் இப்படம் ஓடிக்கொண்டிருக்கிறது.

--'சினிமாப் பித்தன்'


## வரி விளம்பரம்

### திருமணவிழா

நாவற்குழியைச் சேர்ந்த திரு. திருமதி நடராஜா தம்பதிகளின் திருநிறை செல்வன் சிவராஜாவிற்கும், 465, காங்கேசன்துறை வீதியைச் சேர்ந்த திரு. குமாரசுவாமி தம்பதிகளின் திருநிறைச் செல்வி பத்மினிதேவிக்கும் எதிர்வரும் புதன்கிழமை (8-12-65)பி. ப. 1-30முதல் பி. ப. 2 மணிவரை உள்ள சுபமுகூர்த்தவேளையில்இந்து மத ஆசாரப்படி, ஓடைஒழுங்கை, காட்டுத்துறைவிநாயகன் ஆலயத்தில் திருமண விழா நடைபெறும். அவ்வமயம் உறவினர்கள், நண்பர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். சடாட்சரமும் பாரியாரும், குமாரசாமியாரும் பாரியாரும். 1458

### கல்வி

தபால் மூலம்உதவிபெற்ற கிறீஸ்த வேதத்தைப் படிப்பதற்கு ஒழுங்கு செய்யப்படுகியது. இப் பாடங்களை எடுக்க விரும்புவோர் பின்வரும் விலாசத்திற்கு எழுதவும். கனம் டீ. ரி. நயில்ல், வளலாய், அச்சுவேலி. 1454

எங்கள் சிறுவர் பாடசாலையில் (Nursery) உங்கள்பிள்ளைகளைச் சேருங்கள். தையல் வகுப்பும் நடை பெறுகின்றது. யுனைட்டெட் இன்ஸ்ரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி. 1441

யாழ்ப்பாண ரிறிமர் மண்டபத்தில் வித்தியாலயப் படிப்பை முடித்த பெண்களுக்கு விசேட வகுப்புகளை நடத்த ஒழுங்குபண்ணப்படுகிறது. காலை 8-45—12-45, மாலை 4—6 வரை பாடங்கள் கற்றுக்கொடுக்கப்படும். காலைப்பாடங்களுக்கு கட்டணம் மாதம் 10 ரூபா. மாலைப்பாடங்களுக்குமாதம் 15 ரூபா. சேரவிரும்புவோர் எழுதவும். காலை—செல்வி மே. தம்பையா, வேம்படி, 1-ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம். மாலை—திருமதி ஞா. ஞானசுந்தரம், கோட்டை, யாழ்ப்பாணம். 1453

### விற்பனைக்கு

(Exide Batteries) எக்சைட் பற்றறிகள் எங்களிடம் சுலபமான தவணைமுறையில் பெற்றுக்கொள்ளலாம். முருகன் எலக்றிக்கல் ஸ்ரோர்ஸ், ஸ்ரான்லிறோட், யாழ்ப்பாணம். 1422

நல்லூரில் அரசடிச் சந்திக்கும் கந்தசுவாமி கோவில் மேற்குவீதிச் சந்திக்குமிடையில் றோட்டுக்கு வடக்கே "வினைதீர்த்தான்" என்னும் காணி நிலப்பரப்பு 4-குளி 6; கடைகட்ட நல்லது. — அ. சிவக்கொழுந்து, தலைமையாசிரியர், குமரபுரம், பரந்தன். 1424

உடும்பிராய் பிரதானவீதியில், திரு. செல்லத்துரையின் "லீலிவானம்" என்ற வீட்டிற்குப் பக்கத்திலுள்ள "மிர்ரியன்" என்ற 30 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. மருதனுமட புகையிரத நிலையத்திலிருந்து 200 யாருக்குள்; விண்ணப்பிக்கலாம்; சரவணமுத்து, 22/1, கச்சேரி ஒழுங்கை, சுண்டிக்குளி. 1444

### தேவை

நீர்வேலிவடக்கு இலக்குமி ஐக்கியபண்டகசாலைக்கு ஒரு மனேச்சர் தேவை. காசுப் பிணை ரூபா 1500/. ஆதனப் பிணை ரூ. 2000/- சம்பளம் ரூ. 120/- கூட்டுறவுப் பாடசாலையில் சாதாரண பயிற்சி பெற்றவராய் இருத்தல் வேண்டும். முடிவு திகதி 20-12-65. இ. செல்லத்துரை, 'அருளகம்' நீர்வேலி வடக்கு. 1450

புது வியாபார நிலையத்திற்கு ஆங்கிலம் தெரிந்த பெண் விற்பனையாளர்கள் சொற்ப பிணைப் பணத்துடன் தேவை. திங்கள், செவ்வாய்க்கிழமையில் நேரில் சந்திக்கவும். 64, கண்டிறோட், கச்சேரிக்குமுன், யாழ்ப்பாணம். 1455

### பிரபல சோதிடம்

சாதகபலன் ரூபா 3-00, ரேகைபலன் ரூபா 2-00, ஆரூடபலன் ரூபா 1-00, S. சிவகுருநாதன், 160 அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 1452


## வவனியா பாடசாலைகள் புனரமைப்பு நடவடிக்கைகள்

வவனியா, ஞாயிறு

வவனியா மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளுக்கும்விரைவில்விஞ்ஞான, விவசாய, கைத்தொழில், சங்கீத ஆசிரியர்கள் நியமிக்கப்பட விருக்கிறார்கள். இதுசம்பந்தமாக அரசாங்கத்துடனும், கல்வி மந்திரியுடனும் நான் நடத்திய பேச்சுவார்த்தை வெற்றியளித்துள்ளது.

கொக்குத்தொடுவாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்க விழாவில்முக்கியவிருந்தினராகக் கலந்துகொண்ட வவனியா எம். பி. திரு ரி. சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:- வவனியாப் பகுதியில் சூருவளியினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தி 85,000 ரூபா ஒதுக்கியுள்ளேன். இப்பணத்தின்மூலம் தரைமட்டமான பாடசாலைக் கட்டடங்களும் ஏனைய சிறிய சேதமுற்ற பாடசாலைகளும் திருத்தி அமைக்கப்பட்டு, புதிய கட்டடங்களில் வகுப்புகள் ஆரம்பிக்கப்படும். வவனியாத் தொகுதி ஒரு பின்தங்கிய தொகுதியாக இருப்பதனால் கல்வியைப பொறுத்தவரையும் அதிக கவனம்செலுத்த வேண்டும்.


7-வது வெற்றி வாரம்!

கிங்ஸலி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) லக்ஷ்மி (இரத்தினபுரி) சந்தியா (கம்பளை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2 6, 9-30 மணிக்கு

தென்னாட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!

எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
(இருவேடங்களில்)
ரங்கராவ், நம்பியார், தங்கவேலு, ரத்னு, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி
நடித்த



விஜயா கம்பைன்ஸ்
எங்கவீட்டுப் பிள்ளை
(ஈஸ்மென்கலர்)

ராதா குரு பற்பொடி




பற்களை வெண்மையாக்கி, வாய் நாற்றத்தைப் போக்கி, பற்களுக்கு பூரணமான பாதுகாப்பளிக்கிறது. பல்வலி, பல் அரணை, முரசு கரைதல் முதலிய பல் சம்பந்தமான நோய்களுக்கு நிவாரணமளிக்கும்.

தயாரிப்பாளர்கள்: ராதா புறடக்ஸ்

விநியோகஸ்தர்கள்: போன்: 541.
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
53, கே. கே. எஸ்.றோட், யாழ்ப்பாணம். 160, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழாசிரியர் இடமாற்றம் அவசியமானதே

## ஆசிரியர் சங்க கூட்டத்தில் எஸ். ஜே. வி.

யாழ்ப்பாணம், ஞாயிறு

''வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழாசிரியர்கள் ஏனைய மாகாணங்களுக்குச் சென்று கடமையாற்றத் தயங்குவதால் ஏனைய மாகாணங்களில் பல தமிழ்ப் பாடசாலைகள் மூடப்படவேண்டிய நெருக்கடி நிலைமை தோன்றியுள்ளது. வெளியிடங்களுக்குச் சென்று கல்வி கற்பிக்க வேண்டும் என்பது வட மாகாணத்தில் உள்ள ஆசியர்களுக்கு வேப்பெண்ணெய் போல்கசக்கிறதே. ஆசிரியர்கள் இடமாற்ற விஷயத்தில் அவசியமின்றி தலையிடுவதில்லை என எமது கட்சி முடிவுசெய்துள்ளது. தமிழாசிரியர்கள் ஒழுங்குபடுத்தப்பட்ட ஒருஇடமாற்றத்திட்டத்தின் கீழ் வெளி மாகாணங்களில் உள்ள தமிழ் பிள்ளைகளின் கல்விக்கு சேவைசெய்ய வேண்டியது கட்டாயமானதாகும்.''

இவ்வாறு நேற்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற்ற அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழாசிரியர் சங்கத்தின் வடபிரதேசக் கிளைகளின் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் தமிழரசுக் கட்சித்தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் குறிப்பிட்டார். கூட்டத்துக்கு திரு. இ. தாமோதரம்பிள்ளை தலைமை வகித்தார்.

திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகம் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

தென்னிலங்கையில் தமிழாசிரியர்கள் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளதும்பலதமிழ்ப் பாடசாலைகளை முடவேண்டியநிலைமைக்கு ஒரு காரணமாகும். வடமாகாணத்தில் தேவைக்கு மிஞ்சிய தமிழாசிரியர் இருப்பதாகவும்இவர்களை அங்கு இடமாற்றம் செய்தபின்னரும் மேலும் ஆசிரியர்கள் தேவைப்படுமானல் புதிய நியமனங்கள் செய்யுமாறு நாம் அரசாங்கத்தைக்கேட்போம்.

தமிழ் ஆசிரியர்களும், தமிழ் தலைமை ஆசிரியர்களும் சிங்களம் கற்கவேண்டுமா இல்லையா என்பது பற்றி ஆராயவென மந்திரிகள் உப கமிட்டி ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இவர்கள் சிங்களம் கற்கத்தேவையில்லை என்றுதான் மந்திரி உபகமிட்டி முடிவு செய்யும் என நாம் நம்புகிறோம். ஆனல் நிச்சயமாகச் சொல்லுவதற்கில்லை. இக்கமிட்டியில் திரு. எம். திருச்செல்வமும் அங்கம் வகிக்கிருர், தமிழாசிரியர்களுடன் தமிழிலேயே தொடர்புகொள்ள வேண்டும், தமிழ்ப்பாடசாலைகளின் நிர்வாகம் தமிழில் நடைபெற வேண்டுமென்பது பற்றிப் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்துவோம்.

திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் இடமாற்றம் என்றவுடன் இங்குள்ள ஆசியரிர்கள் தயங்குதாகவும், தேகநிலை குன்றியிருப்பதாக அத்தாட்சிப் பத்திரங்களுடன் எம். பி.க்கள் வீடுகளுக்குப் படையெடுப்பதாகவும், இது வெட்கப்படவேண்டியசெயலெனவும் குறிப்பிட்டார். இவர்கள் இவ்விதம் செய்தால் இடமாற்ற வைத்தியசபை ஒன்றை நிறுவவேண்டியும் ஏற்படலாம் எனவும் திரு. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

திருவாளர்கள் வி. நவரத்தினம், சி. கதிரவேற்பிள்ளை, வித்துவான் ப. சிவப்பிரகாசம், சு. செல்லையா, அ. பொன்னம்பலம் உட்பட வேறு பலரும் பேசினர்.

—ந. நி.

## டகோபா சேதம்

காலி, சனி

மிஹிரிபென என்னுமிடத்தில் உள்ள ஆரியகார பௌத்த ஆலயத்தின் ''டகோபா'' இடிமுழக்கத்திஞலும் மின்னலாலும் சேதமடைந்துள்ளது.

காலி, சனி

ஜிந்தோட்ட ஓட்டுப் பலகைத் தொழிற்சாலை ஊழியர்களின் வேலை நிறுத்தம் நீடித்துவருகிறது. இன்று இவர்கள் ஐந்தாவதுநாளாக வேலைநிறுத்தம் செய்தனர்.

## ''நான் ஒளித்திரு..

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் திரு. மெல் தெரிவித்தார்.

### நல்லது செய்வோம்

''காலங்கள் பல என்வாழ்க்கையில் வீணுகக் கடந்துவிட்டபோதிலும், இனியும் நான் நாட்டுக்கும் நம் மக்களுக்கும் நல்லது செய்யலாம் என்ற நம்பிக்கை எனக்குண்டு எனக்கு இப்போது வயது 45 தானே! 45 வயது இளம் வயதுதானே?'' என்று சிரித்தபடி கூறினுர் மெல்.

''சிறைப்பகுதி உத்தியோகத்தர்கள் மிகவும் நல்லவர்கள்; எங்களுடன்மிகவும் மரியாதையாக நடந்துகொண்டார்கள்'' என்று சொன்ன மெல், ''எனக்குப் பிடித்தமான 'செனிஸ் ஓட்ட'லில் சென்று எனக்கு விருப்பமான சீன உணவைச் சாப்பிடவேண்டுமென்று துடிக்கிறேன்'' என்று சிரித்தபடி கூறினுர்.

### ஒரே ஒரு பிரமச்சாரி

சதிவழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த பதினெருவர்களில் ஜேசுதாசன் ஒருவர் தான் பிரமச்சாரி! விடுதலை பெற்று சிறைச்சாலை வெளியே 'சுதந்திரப் பறவை' களாக வந்த சதிவழக்கு எதிரிகள் அத்தனை பேரையும் மனைவி, மக்கள் தான் கட்டியணைத்து முத்தம் கொடுத்தார்கள். ஆனல் ஜேசுதாசன் பட்டும் இதற்கு விதிவிலக்காகி விட்டார். அவர் அன்பு அன்னை அவர் வெளியே வந்தது தான் தாமதம்—அன்பு சொரிய மகிழ்ச்சி பொங்க ஜேசுதாசனை அணைத்துக் கொண்டார்.

''எதிர்காலத்தில் நான்என்ன செய்யப்போகிறேன் என்பதற்கு திடமான திட்டம் எதுவுமில்லை. முதலில் நிம்மதியாக இருப்போம்'' என்று சொன்ன திரு. ஜேசுதாசன் தமது தகப்பனுரின் சமாதி இருக்குமிடத்துக்கு முதலில் விஜயம் செய்து மரியாதை செலுத்தினுர். திரு. ஜேசுதாசன் சிறையிலிருக்கும் போது, அவர் தகப்பனுர் இறந்துவிட்டார்.

திரு, சிட்னி டி. சொய்சா தமது மனைவிபிள்ளைகளுடன் தேவாலயத்துக்கு முதலில் விஜயம் செய்த பின்னர் கொள்ளுப்பிட்டியிலுள்ள தமது வீட்டுக்குச் சென்ருர்,

11 பேரும் கையொப்பமிட்ட நிபந்தனைகளடங்கிய பத்திரத்தில் பத்துவருடகடூழியச் சிறைத்தண்டனை 1966-ம் வருடம் ஜனவரி 14-ந்திகதிவரை (அத்திகதி உட்பட) ஒத்திவைக்கப்பட வேண்டுமென்றும் அவர்கள் சிறைச்சாலை அதிகாரிகளின் உத்தரவின்றி நாட்டைவிட்டு வெளியே செல்லமுடியாது என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## வடபகுதியில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரத்துகள் நடைபெறவில்லை.

திருக்கோணமலையில் கடந்த சில தினங்களுக்குப் பின்னர் இன்று மழை விட்டிருந்தது. ஆனல் கரையோரப்பகுதிகளில் காற்று பலமாக வீசிக்கொண்டிருந்தது. திருக்கோணமலை வவனியா வழியில் பல இடங்களில் வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது. சில பாலங்கள் சேதமடையும் நிலையிலிருக்கிறது.

கொழும்பு, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு நிந்தாவூரிலிருந்து கடித போக்குவரத்து தடைபட்டுள்ளது. இந்த இடங்களுக்கு தந்திப் போக்குவரத்தும் சிக்கலாக இருக்கின்றது. கடந்த 12 மணி நேரத்தில் கிழக்கு மாகாணத்தில் 3 அங்குல மழை பெய்துள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ளவர்கள் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் பெற முடியாமலிருக்கின்ருர்கள்.

மிளகாய், சீனி, வெங்காயம், உருளைக்கிழங்கு. பால் உணவுகள் பெற முடியாமலிருக்கிறது.

அண்மையில் பயிரிடப்பட்ட ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல் முற்ருக வெள்ளத்தில் மூழ்கிவிட்டன. மற்றும் மூவாயிரம் ஏக்கர் பயிரிடப்படாத நிலமும் வெள்ளத்தில் மூழ்கிவிட்டன. தொடர்ந்து மழை பெய்யுமானல் பயிர்கள் முற்ருக அழிந்துவிடுமெனவும் அஞ்சப்படுகிறது.

அக்கரைப்பற்றில் பல வீடுகள் வெள்ளத்தில் மூழ்கிவிட்டன. இங்குள்ள மக்கள் வேறிடங்களுக்குச் சென்றுள்ளார்கள். தொடர்ந்து மழைபெய்யுமானல் பெரும் வெள்ளம் ஏற்படுமென்ற அச்சம் மக்களிடையே ஏற்பட்டுள்ளது.

(5-ம் கலத் தொடர்ச்சி)

ணீர் வயல்களுக்குள் நிற்பதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். வானம் எந்நேரமும் இருள் மயமாகவே காணப்படுகிறது. மழை தொடர்ந்து பெய்துகொண்டேயிருக்கின்றது.

### உடுப்பிட்டியில்

வடமராட்சியில் கடும் மழை காரணமாக அநேக வீட்டுக் கிணறுகளில் தண்ணீர் நிரம்பிவிட்டது. அநேக மண் வீடுகளைச் சுற்றி வெள்ளம் நிற்கிறது. வீட்டிலிருந்து அடுப்படிக்கு வெள்ளத்திஞடாகவே செல்லவேண்டிய பரிதாப நிலையில் அநேக தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் பரிதவிக்கின்றன. சில ஆலயங்களுக்குள்ளும் வெள்ளம் புகுந்துவிட்டது.

அல்வாய் மாலி சந்திப் பிள்ளையார் ஆலயம் தண்ணீரில் மிதப்பதுபோல் காணப்படுகிறது. அல்வாய் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையுள்ளும் வெள்ளம் புகுந்துவிட்டது. தொடர்ச்சியான மழையைத் தொடர்ந்து புயல் காற்று வருமோ என்ற பீதியில் பொது மக்கள் உயர்ந்த மரக்கிளைகளை வெட்டுவதிலும் சில பாரிய மரங்களைத் தறிப்பதிலும் ஈடுபட்டுள்ளனர்.

சில தோட்டங்களில் கத்தரி, வெண்டி, கீரை முதலிய பயிர்களை மூடி வெள்ளம் நிற்கிறது. இதனுல் விவசாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளனர். கடந்த நான்கு தினங்களாக இடைவிடாது இப்பகுதியில் மழை பெய்துகொண்டேயிருக்கிறது.

# ''நாட்டுப்பற்றுடன் சேவைபுரிவோம்''

## களைபிடுங்கு விழாவில் பேச்சு

வவனியா, ஞாயிறு

''பிறநாடுகளுக்குஉணவுப் பண்டங்களை ஏற்றுமதி செய்து, ''ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்'' என்று பட்டினப்பாலை என்னும் சங்க நூலால் புகழப்பட்ட எங்கள் நாடு இன்று தன்னுட்டில் பிறந்தவர்களுக்கே உணவளிக்கமுடியாமல் திணடாடுகின்றது. இது இன்றைய மக்களின் முயற்சியின்மையைக் காட்டுகின்றது. பொருளாதாரம்பற்றி மேசை அதிரப்பேசுவதால் மட்டும் நிலைமை சீர்பட்டுவிடாது. ஒவ்வொருவரும் நாடு வேறு எங்கள் வீடு வேறு என்ற மனப்பான்மையை அகற்றி மனமார்ந்த தொண்டினைச் செயல்மூலம் இந்நாட்டுக்கு ஆற்ற முன்வரவேண்டும். அத்தகைய ஒரு புனிதத்தொண்டுதான் இன்று நாம் ஆரம்பிக்கும் களை பறித்தல் வைபவமாகும்.''

இவ்வாறு கோயிற்புளியங்குளம் அரசினர் பாடசாலை மாணவர்களைக் கொண்டு களை பறித்தல்வைபவத்தை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் வவனியாப்பகுதி விவசாயப் போதனுசிரியர் திரு. எஸ். நடராசா கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-''மாணவர்கள் இதில் பங்குகொள்வது சிறப்பானதொரு அம்சமாகும். இதன் மூலம் மாணவர்களுக்குத் தொழிற் பயிற்சியும், நாட்டுக்கு உணவும் கிடைக்கிறது. கூட்டுறவுப் பழக்கம், பரஸ்பர உதவி மனப்பான்மை என்பனவும் ஏற்படுகின்றன. வேலையில்லாத் தொல்லையும் தீரும். மாணவர்களும் பெற்ருேர்களும் தத்தம் வீடுகளில் தோட்டப்பயிர்களை உற்பத்தி செய்யவும் சேர்ந்த பணத்தில் ஒரு பகுதியைச் சேமிக்கவும் முன்வரவேண்டும். இந்நிலை கிடைத்துவிட்டால் சூருவளிகளைக் கண்டு அஞ்சாது சவால் விட்டழைக்க முடியும்.''

இவ்வைபவத்தில் உணவு உற்பத்தி மேற்பார்வையாளர் திரு. நா. ஜெயராசா, பயிர்ச்செய்கைக் குழுச்செயலாளர் திரு. ஆ, சரவணமுத்து ஆகியோருட்படப் பலர் கலந்துகொண்டனர்.

திரு. சி. தியாகராசா தலைமையில் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. க. வேலன் தலைமையில் கோயிற்புளியங்குளம் குஞ்சுக்குளம், செங்கற்படை ஆகிய கிராம மக்கள்கலந்துகொண்டனர். இவ் வைபவத்துக்குரிய ஒழுங்குகளை கோயிற்புளியங்குளம் அரசினர் பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. கா, சின்னத்துரை செய்திருந்தார்.

# வட, கிழக்கில் பேய்மழை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### சுழிபுரத்தில்

தொடர்ந்து பெய்யும் மழையின் காரணமாக பல இடங்கள் வெள்ளக்காடாகவே காட்சியளிக்கின்றன. பிரதான வீதிகள் வெட்டப்பட்டு வெள்ளம்போக்கப்படுகின்றன. நல்ல வெள்ளோட்ட வாய்க்கால் அமைப்புகள் இல்லாததினுல் அனேக இடங்களில் வெள்ளம் அப்படியேநிற்கின்றன. தாழ்ந்த இடங்களில் இருந்த அனேகர் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். மழைதொடர்ந்து பெய்யுமானுல் நிலைமை மிகவும் மோசமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சுழிபுரம் குடாக்கனைப் பகுதியில் பெட்டி படுக்கைகள் வெள்ளத்தில் மிதக்கின்றன. குடிசைகளில் வெள்ளம் புகுந்து ஒரே வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றது. பொன்னுலைக்குளம் நிரம்பியுள்ளன. தொல்புரம் கிராம கிழக்குக் கரையோரத்தில் வாழும் பலர் வெள்ளப் பெருக்கினுல் தமது வீடுகளைவிட்டு வெளியேறியுள்ளன. ர்நேற்றையதினம் மழை விடாது தொடர்ந்து பெய்து கொண்டே இருந்தது.

### ஊர்காவற்றுறையில்

தீவுப்பகுதியில் கடந்த இரு தினங்களாகப் பெய்த மழையினுல் எங்கும் வெள்ளக்காடாக இருக்கிறது. தாழ்ந்த பகுதிகளிலும், சேரிப் பகுதிகளிலும் வசிக்கும் மக்கள் வெள்ளத்தினுல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். வெள்ளத்தை வடிகால்கள் வெட்டி கடலுக்கு ஓடுவதற்கு சிரமதானமூலம் மக்கள் முயற்சி எடுத்துவருகின்றனர். வடிகால்அமைக்க வேண்டிய பகுதிகளில் வடிகால் இல்லாமையால் வெள்ளம் தடைபட்டு நிற்கிறது.

சரவணை, நாரந்தனை, வேலணை ஆகிய கிராமங்களில் பெய்த மழையினுல் புகையிலை நடுபவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து மழை கூடுதலாகப் பெய்யுமானுல் மரங்கள் வீடுகளுக்குச் சேதமேற்படலாமெனத் தெரிகிறது.

### வல்வெட்டித்துறையில்

இப்பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் அல்வாய்- தொண்டமானுறு பாதையில் சில இடங்களில் பாதையின் [illegible] மலால் தண்ணீர் பாய்ந்துகொண்டிருப்பதால் போக்கு வரத்துக்குப் பெரிய இடைஞ்சலாக இருந்துவருகிறது. சில இடங்களில் அளவுக்கு மிஞ்சிய தண்

(3-ம் கலம் பார்க்க)

# ஜி. ஜி. க்கு சிறப்பான வரவேற்பு ஏற்பாடு

யாழ்ப்பாணம், திங்.

ஐக்கியநாடுகள் சபைக்கு இலங்கைக் கோஷ்டிக்குத் தலைமைதாங்கிச்சென்றுள்ள திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திற்கு கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் வரவேற்பளிப்பதென நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் திரு. எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் கூடிய தமிழ்க் காங்கிரஸ் கமிட்டிக்கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

மட்டக்களப்பு, திருகோணமலை, வவனியா, உடுப்பிட்டி, கண்டி மற்றும் பல இடங்களிலும் வரவேற்பளிப்பது சம்பந்தமாகவும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் சுயசரிதை, பேச்சுக்கள், பாராட்டுக்கள் கொண்ட ஒரு 'மலர்' வெளியிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம், மாவட்ட தலைவர், உதவிக் காரியதரிசி, தனுதிகாரி ஆகியவர்களைக் கொண்ட ஒரு வரவேற்புக் கமிட்டியும் தெரிவு செய்யப்பட்டது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி; 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org